**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.78/2015**

**வழக்கு சாட்சி: PW.8**

**தேதி: 24.02.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **ஆறுமுகம்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **அழகு** | **தொழில்:** | **விவசாயம்** |
| **கிராமம்:** | **வேலூர்** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **மானாமதுரை** | **வயது:** | **52/2023** |

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை:**

எனக்கு சொந்த ஊர் வேலூர் கிராமம். நான் வேலூரில் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. சுமார் 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு இரவு நேரத்தில் நேரம் தெரியாது. நான் ஊரில் இருந்தேன். ஆம்புலன்ஸ் சத்தம் கேட்டது. ஒரு கி.மீ தூரம் உள்ள ஒத்தவீட்டிற்கு சென்றேன். அங்கு போலீசார் இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னை பற்றி விபரம் கூறினேன். போலீசார் போட்டோ எடுத்தார்கள். மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றும் 06-01-2015ம் தேதி இரவு சுமார் 11 மணிக்கு நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் கிருஷ்ணன் என்பவரும் எங்கள் ஊர் அருகேயுள்ள ஒத்தவீட்டில் எங்களுக்கு நன்கு தெரிந்த தனபாக்கியத்தையும் அவரது மாமியார் ஆறுமுகம் என்பவரையும் மகள் ராஜேஸ்வரியையும் அவர்களது மருமகன் எதிரி வெட்டி கொன்ற செய்தி கேட்டு அங்கு இறந்து கிடந்தவர்களை பார்த்துக் கொண்டிருந்த போது இரவு

12.10மணியளவில் அங்கே வந்த சிப்காட் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மின்விளக்கு வெளிச்சம் மற்றும் சுமோ காரின் முகப்பு விளக்கு உதவியுடன் சம்பவத்தை பார்வையிட்டார்கள் என்று நான் சொன்னேனா என்றால் இல்லை. எங்களை சாட்சிகளாக வைத்துக் கொண்டு போலீசார் மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றும் நாங்கள் அங்கே இருக்கும் போது எங்கள் முன்னிலையில் இறந்து கிடந்த தனபாக்கியம், ஆறுமுகம், ராஜேஸ்வரி ஆகிய பிரேதங்களுக்கு அருகே சிதறி கிடந்த இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றையும் சம்பவம் சமயத்தில் எதிரி பாண்டித்துரை பயன்படுத்திய இருசக்கர வாகனத்தையும் போலீசார்கள் கைப்பற்றினார்களா என்றால் இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றை கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை பற்றி எனக்கு தெரியாது. எங்கள் முன்பாக பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சி தயார் செய்தார்கள் என்றும் அவைகளில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 ஆகவும் அத்தாட்சி அ.த.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அவைகளில் முதலில் உள்ள ஆறுமுகம் என்ற கையெழுத்து என்னுடையது தான். எனக்கு பின்னீடு அவைகளில் என்னுடன் இருந்த கிருஷ்ணன் கையெழுத்து செய்தார். ஏற்கனவே காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் நடந்த விபரங்களை வாக்குமூலமாக கூறினேன் என்றும் தற்போது எதிரி பாண்டித்துரை எனக்கு வேண்டிய உறவினர் என்பதால் அவரை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பல விஷயங்களை மாற்றி பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

நான் கையெழுத்து செய்ததாக அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் கூறியுள்ள பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விஷயங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரத்தம் பட்ட மண் மற்றும் இரத்தம் படாத மண் ஆகியவைகளை எங்கெங்கு இருந்து எடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போலீசார் பார்வையிட்டு சென்ற பின் தான் சம்பவம் இடம் சென்றேன் என்றாலும் எழுதாத வெள்ளை பேப்பரில் நான் கையெழுத்து செய்தேன் என்றும் சொன்னாலும் சரியல்ல. அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் இரத்தம்பட்ட மண், இரத்தம் படாத மண் ஆகியவைகளை கைப்பற்றும் போது நான் இருந்தேன் என்றும் பார்வை மகஜர் அத்தாட்சியில் நான் கையெழுத்து செய்தேன் என்றும் காவல்துறை என்னை மிரட்டியதால் காவல்துறைக்கு பயந்து கொண்டு அவ்வாறு நான் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை: முடிவுற்றது.